**9. கலைஞர் கோவையில் உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்திய ஆண்டு**

அ) 2012 ஆ) 2011
இ) 2013 ஈ) 2010

**விடை: ஈ) 2010**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "கலைஞர், பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர், படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.**

**விடை :**

பேராசிரியர் அன்பழகனார் கலைஞரை, பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர் என்றும், படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் என்றும் கூறினார்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. சிலப்பதிகாரம் பற்றி கலைஞர் எழுதிய கவிதை யாது ?**

**விடை :**

"இந்த எட்டுச்சுவை பிட்டுத்தமிழ் கட்டித்தயிர் வட்டில் நிறை கொட்டித் தரப்பட்டுக் கொடிக் கொற்றக் குடை முத்துச்சரச் சோழனூர் வருவீரே" என்பது சிலப்பதிகாரம் பற்றிக் கலைஞர் எழுதிய கவிதை ஆகும்.

---

**3. ஐயன் திருவள்ளுவருக்கு கலைஞர் மு.கருணாநிதி செய்த சிறப்புகள் இரண்டினைக் கூறு ?**

**விடை :**

1. ஐயன் திருவள்ளுவர் மீது அவருக்கிருந்த தீராத பற்றின் காரணமாக, தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார்.
2. தெற்கெல்லையான குமரியில் வள்ளுவர் சிலை அமைத்தார்.

---

**4. விடைக்கேற்ற வினாக்களை அமைக்க.**

**அ) கலைஞர் எழுதிய பழநியப்பன் என்னும் முதல் நாடகம் 1944 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.**

**விடை :**

கலைஞர் எழுதிய முதல் நாடகம் எந்த ஆண்டு அரங்கேற்றப்பட்டது ?

**ஆ) தமிழ் மீது தீராத பற்றுக் கொண்டவர் கலைஞர்.**

**விடை :**

எம்மொழி மீது தீராத பற்றுக் கொண்டவர் கலைஞர் ?

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. தமிழ் மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.**

**விடை :**

1. கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மனோன்மணியம் சுந்தரனாரின் " நீராருங் கடலுடுத்த" என்னும் பாடலை அரசு விழாக்கள் அனைத்திலும் தொடக்கப்பாடலாகப் பாடுவதற்கு வழிவகுத்தார்.
2. கல்வித்துறையை பள்ளிக் கல்வி, உயர் கல்வி என இரண்டாகப் பிரித்ததோடு தமிழ் வளர்ச்சித் துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கி அதற்குத் தமிழறிஞர் ஒருவரையே அமைச்சராக்கினார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. கலைஞர் மு.கருணாநிதியின் தொல்காப்பியப் பூங்கா – குறிப்பு வரைக.**

**விடை :**

இலக்கண நூலுக்கு இலக்கியச் சுவை தோன்றுமாறு அமைந்த புதுமை நூலே கலைஞரின் "தொல்காப்பியப் பூங்கா". பெயருக்குப் பொருத்தமாக, 142 தொல்காப்பிய நூற்பாக்களை மட்டும் எடுத்துக்கொண்டு, 100 தலைப்புகளில் 100 மலர்களாக உரையினை எழுதியுள்ளார். கலைஞருக்கே உரித்தான இனிய எளிய நடையும் படிப்பவர்க்குக் கற்பனையாய்த் தோன்றும் காட்சியின்பமும் வெளிப்படுமாறு பூங்காவிற்குள் நம்மைக் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார்.

---

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**1. உரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**தமிழ் மீது தீராத பற்றுக் கொண்ட கலைஞர், இலக்கியத்திலும் பெரும்பங்காற்றினார். நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக்கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சு உள்ளிட்ட பல சிறுகதைகளையும், ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தம் வாழ்க்கை வரலாற்றை "நெஞ்சுக்கு நீதி" என்னும் தலைப்பில் ஆறு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார். புனைவுகளில் மட்டும் அல்லாது தமிழார்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் அவர் உரை எழுதியுள்ளார். அவற்றுள் சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.**

**வினாக்கள் :**

**1. எம்மொழி மீது தீராத பற்றுக் கொண்டவர் கலைஞர் ?**

**விடை :**

தமிழ் மீது தீராத பற்றுக் கொண்டவர் கலைஞர்.

**2. கலைஞர் எழுதியுள்ள சிறுகதைகள் யாவை ?**

**விடை :**

நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக்கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சு.

**3. கலைஞர் எழுதியுள்ள புதினங்கள் யாவை ?**

**விடை :**

ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம்.

**4. கலைஞர் தம் வாழ்க்கை வரலாற்றை எத்தலைப்பில் வெளியிட்டுள்ளார் ?**

**விடை :**

நெஞ்சுக்கு நீதி

**5. எந்தப் பழந்தமிழ் இலக்கியங்களுக்குக் கலைஞர் உரை எழுதியுள்ளார் ?**

**விடை :**

சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

**விடை :**

**பாராட்டுக்கடிதம்**

பெருமதிப்பிற்குரிய தலைமை ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் !

நமது பள்ளி ஆண்டுவிழாவில் நெகிழிப் பைகளின் தீமையை பொம்மலாட்டக் கலை மூலம் எடுத்தியம்பிய விதம் மிகவும் அருமை. நடத்திய பொம்மலாட்டக் கலைஞர்களுக்கும், தலைமை ஆசிரியராகிய உங்களுக்கும் ஏனைய ஆசிரியர் பெருமக்களுக்கும் மாணவர்கள் சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகரீகம் விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில் மனித இனம் பல்வேறு துறைகளில் புதுப்புது வளர்ச்சியை அடைந்து வந்துள்ளது. ஏன், இன்னும் பல அபரிமிதமான வளர்ச்சியையும் சமூகம் காணப்போகிறது. இதில் ஒரு பாதகமான செயல்பாடு எதுவென்றால், ஒவ்வொரு பொருட்களின் கண்டுபிடிப்புகளுக்குப் பின்பும், அப்பொருளின் பயன்பாட்டுக்குப் பின்பும் ஒரு தீய விளைவை மனித இனம் இந்தப் பூமிக்குக் கொடுத்துக்கொண்டே வந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இன்று நாம் நெகிழி என தமிழில் அழைக்கப்படும் பிளாஸ்டிக் இல்லாத தினசரி வாழ்க்கையில் மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இதனைப் பயன்படுத்தி வருகிறோம் என பொம்மலாட்டக் கலைஞர்கள் நாடகம் மூலம் விளக்கிய விதம் அருமை.

இன்று நாம் நெகிழிப் பைகளை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தித் தூக்கி எறியும் செயலானது படு பாதகச் செயலாகும். ஏனென்றால் பொதுமக்கள் பொருட்களை வாங்கி எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் நெகிழிப் பைகளின் சராசரி ஆயுட்காலம் வெறும் 12 நிமிடங்கள் மட்டுமே என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது அதனைக் கையில் வாங்குவதற்கும், குப்பையில் எறிவதற்கும் இடையே வெறும் 12 நிமிடங்கள் மட்டுமே பயன்படுகிறது. ஆனால் இந்த நெகிழிப் பை அழிவதற்கு 1000 ஆண்டுகள் ஆகும். இதை பொம்மலாட்டக் கலைஞர்கள் ஓவியம் மூலம் விளக்கிய விதம் அருமை.

இன்று ஒருவர் தூக்கி எறியும் நெகிழிப் பை அவரது பிள்ளைகள், பேரன் பேத்திகள் இவர்களின் பிள்ளைகள் எனப் பல தலைமுறையினருக்கும் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பொம்மலாட்டக் கலைஞர்கள் இசைத்துப் பாடிய விதம் அருமை.

ஆங்காங்கே தேங்கிக் கிடக்கும் நெகிழிப் பைகள் அசுத்தத்தை ஏற்படுத்துவதுடன், டெங்கு, மலேரியா எனப் பற்பல நோய்கள் தோன்றக் காரணமாகிறது. நெகிழிக் குப்பையை எரிப்பதால் இதிலிருந்து டையாக்சின் வாயு வெளியேறுகிறது. இது புற்று நோயை ஏற்படுத்தும் ஆபத்து கொண்டதாகும் என்பதைப் பொம்மலாட்டக் கலைஞர்கள் விளக்கிய விதம் சிறப்பாக இருந்தது.

நன்றி !

இப்படிக்கு,
கீழ்படிந்துள்ள மாணவன்
ர. பாலா

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

**விடை :**

**குறிப்புச் சட்டம் :**

**முன்னுரை – போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் – முடிவுரை**

**முன்னுரை :**

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் தன் முத்திரை பதித்ததால் மு.கருணாநிதி அவர்கள் முத்தமிழ் அறிஞர் என்று போற்றப்பட்டார். அவருடைய பன்முகத் திறமைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**போராட்டக் கலைஞர் :**

★ பள்ளி முடிந்த மாலை வேளைகளில் தாம் எழுதிய " வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்!" என்ற பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டினார்.

★ போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர். அந்தப் போராட்டப் பண்பே அவருக்குள் இருந்த கலைத்தன்மையை வளர்த்தது.

**பேச்சுக் கலைஞர் :**

★ இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றால் அவரைக் கவர்ந்தது.

★ மேடைப் பேச்சினில் பெருவிருப்பம் கொண்ட கலைஞர், "நட்பு" என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது.

**நாடகக் கலைஞர் :**

★ கலைஞர் எழுதிய "பழநியப்பன்" என்னும் முதல் நாடகம் 1944 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.

★ அதனைத் தொடர்ந்து சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப் பூ உட்பட பல நாடகங்களை எழுதினார்.

★ தூக்குமேடை என்னும் நாடகத்திற்கான பாராட்டு விழாவில் அவருக்குக் "கலைஞர்" என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.

**திரைக் கலைஞர் :**

★ கலைஞர் எம்.ஜி.ஆர். முதன் முதலாக நடித்த "ராஜகுமாரி" படத்துக்கான முழு வசனத்தையும் எழுதினார். படம் மிகப்பெரிய வெற்றி அடைந்தது.

★ தொடர்ந்து, "மருதநாட்டு இளவரசி", "மந்திரிகுமாரி", "நாம்", "மலைக்கள்ளன்" முதலான படங்கள் வெளிவந்தன.

★ பாவலர் பாலசுந்தரம் கதை எழுதிய "பராசக்திக்கு"க்குத் திரைக்கதை, வசனம் எழுதினார் கலைஞர். படம் வெளிவந்த மறுநாள், பாரெங்கும் பராசக்தி பற்றித்தான் பேச்சு. தமது முதல் படத்திலேயே புகழின் உச்சத்தைத் தொட்டார் சிவாஜி கணேசன்.

★ "மறக்க முடியுமா ?" என்னும் திரைப்படத்தில் அமைந்த "காகித ஓடம் கடல் அலை மேலே" என்னும் பாடல், காலத்தால் மறக்க முடியாத, மக்கள் மனதில் இடம்பெற்றுள்ள பாடலாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயற்றமிழ்க் கலைஞர் :**

தமிழ்மீது தீராத பற்றுக் கொண்ட கலைஞர் நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சு உள்ளிட்ட பல சிறுகதைகளையும் ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார்.

புனைவுகளில் மட்டுமல்லாது தம் தமிழார்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் அவர் உரை எழுதியுள்ளார். அவற்றுள் சங்கத் தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

**முடிவுரை :**

"உடல் மண்ணுக்கு
உயிர் தமிழுக்கு"

என்னும் கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்த கலைஞர் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் காவியமானார்.

---

**கற்பவை கற்றபின்**

**1. பாடத்தில் இடம்பெற்றுள்ள கவிதைக் கலைஞர் தலைப்பிலான பகுதியை மேடையில் பேசுவது போல உரிய குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக் காட்டுக.**

மாணவர் செயல்பாடு

---

**2. பன்முகக் கலைஞரின் கலைப்பண்புகளுள் உங்களுக்குப் பிடித்த கலைப்பண்பு குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

மாணவர் செயல்பாடு

---

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் ஏழு

## இயல் 7. விதை நெல்

இயல் 7. அ

### உரைநடை உலகம்

### சிற்றகல் ஒளி

– ம.பொ. சிவஞானம் – உரைநடை

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

1. "மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ____ (பெ.ஆ.க – 1)
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
   **விடை : அ) திருப்பதியும் திருத்தணியும்**
2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ................ (பெ.ஆ.க – 3)
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு
   இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
   **விடை: ஈ) சிலப்பதிகாரம்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

3. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்................ .(பெ.ஆ.க – 6)
   அ) திரு. பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ. நேசமணி
   இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி
   **விடை: ஆ) மார்ஷல் ஏ. நேசமணி**
4. தமிழகத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது (மே – 22)
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு
   இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஈ) சிலப்பதிகாரம்**
5. ம.பொ.சி க்கு பெற்றோர் இட்ட இயற்பெயர்................ .
   அ) பொன்னுசாமி ஆ) ஞானம்
   இ) ஞானப்பிரகாசம் ஈ) சிவப்பிரகாசம் **விடை: இ) ஞானப்பிரகாசம்**
6. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என முழக்கமிட்டவர் ............... .
   அ) ம.பொ.சி ஆ) பி.எஸ்.மணியன்
   இ) ஏ. நேசமணி ஈ) சங்கரலிங்கனார் **விடை: அ) ம.பொ.சி**
7. ம.பொ.சி முதன் முதலில் ஈடுபட்ட கிளர்ச்சி எது ?
   அ) தெற்கெல்லை ஆ) வடக்கெல்லை
   இ) கிழக்கெல்லை ஈ) மேற்கெல்லை **விடை: அ) தெற்கெல்லை**
8. பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை வெளியான ஆண்டு ................ .
   அ) 1947 ஆ) 1955
   இ) 1957 ஈ) 1950 **விடை: ஆ) 1955**
9. "சிற்றகல் ஒளி" இடம்பெற்றுள்ள நூல் எது ?
   அ) எனது பயணம் ஆ) எனது ஆசை
   இ) எனது போராட்டம் ஈ) எனது வாழ்க்கை **விடை: இ) எனது போராட்டம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**10. சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர்............. .**
அ) பி.எஸ்.மணி ஆ) தாணுலிங்கம்
இ) ம.பொ.சிவஞானம் ஈ) மங்கலங்கிழார் **விடை: இ) ம.பொ.சிவஞானம்**

**11. ம.பொ.சி. தொடங்கிய கழகம்............. .**
அ) தமிழ் முரசு ஆ) முத்தரசு
இ) தமிழரசு ஈ) தமிழ்பிறை **விடை: இ) தமிழரசு**

**12. மார்ஷல் ஏ. நேசமணிக்கு சிலையோடு மணிமண்டபமும் அமைந்துள்ள ஊர் எது ?**
அ) மதுரை ஆ) கன்னியாகுமரி
இ) நாகர்கோவில் ஈ) திருச்சி **விடை: இ) நாகர்கோவில்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக. (பெ.ஆ.க – 4) (மே – 22)**

**விடை :**

★ நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று தனக்கு விருப்பமான புத்தகங்களை மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

★ உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பலவேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.

★ இவற்றால் வறுமையிலும் படிப்பின் மீது ம.பொ.சி. கொண்டிருந்த நாட்டத்தை அறியலாம்.

---

**2. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

**பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – ம.பொ.சி.**

**விடை :**

"பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்". – ம.பொ.சி.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க: (மே – 22)**

**அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.**

**விடை :** ம.பொ.சி. எதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றார் ?

**ஆ) 1906–ஆம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.**

**விடை :** எந்த ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார் ?

---

**4. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

**அ) 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது (அ.மா.வி)**

**விடை :** கன்னியாகுமரி மாவட்டம் எப்பொழுது தமிழ்நாட்டுடன் இணைந்தது ?

**ஆ) ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். (செப் – 20)**

**விடை :** ம.பொ.சி. எந்தப் பாடல்களைப்பாடி பிள்ளைப் பருவத்தில் இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார் ?

---

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அம்மா :** வராத விருந்தினர் வந்தால், அவரை வளையல் போட்டு உபசரிக்க வேண்டும் என்பதில்லை. அவர் சொல்லே உனக்கு விலங்கு. அவர்கள் உன்னைப் புகழும் சொல்லே விலங்கு.

**மகள் :** அம்மா! நான் சொல்வது உனக்கு கோபமாக இருக்கலாம். ஆபரணங்கள் இல்லாமல் நான் தெருவில் போனால் எவர் என்னை மதிப்பார்கள். என் குறையைத் தீருங்கள் அம்மா.

**அம்மா :** மகளே! ஆபரணங்களா ஒரு பெண்ணுக்கு அழகு! கல்வி கற்பது மட்டுமே பெண்ணுக்கு மிகுந்த அழகான ஆபரணமாகும். கெம்புக்கல் நகையும் நமக்குத் தீராத ரணமாகும். ஆனால் கற்ற பெண்களை இந்த நாடு தன் கண்களில் அன்போடு ஒற்றிக் கொள்ளும்.

## இயல் 7. ஏ

## மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I) ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

**புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, கும்பகோணம், திருநெல்வேலி, மன்னார்குடி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை.**

**எ.கா : தஞ்சாவூர் – தஞ்சை**

**விடை :**

| | |
|---|---|
| புதுக்கோட்டை | – புதுகை |
| திருச்சிராப்பள்ளி | – திருச்சி |
| உதகமண்டலம் | – உதகை |
| கோயம்புத்தூர் | – கோவை |
| நாகப்பட்டினம் | – நாகை |
| புதுச்சேரி | – புதுவை |
| கும்பகோணம் | – குடந்தை |
| திருநெல்வேலி | – நெல்லை |
| மன்னார்குடி | – மன்னை |
| மயிலாப்பூர் | – மயிலை |
| சைதாப்பேட்டை | – சைதை |

**II) படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**


வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி.

**விடை :**

இப்படம் திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூரில் கண்டுபிடிக்கப்பட்ட 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர் ஓவியமாகும். அக்காலத்தில் தமிழகத்தில் காலாட்படை, குதிரைப் படை, யானைப்படை என்னும் முப்படைகளே இருந்தன. அக்காலங்களில் அரசன் பகைவரை அழிக்கப் படைகொண்டு செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்போது பாதுகாப்புக்காகக் குதிரைப்படை முன்னேயும், அதனைத் தொடர்ந்து காலாட்படை வீரர்களும் தத்தம் போர்க்கருவிகளைக் கையில் ஏந்திச் செல்வர். அதனைத் தொடர்ந்து அரசன் யானைமேல் அமர்ந்து செல்வான். இதனையே அன்றைய கலைஞன் ஓவியமாக வரைந்துள்ளான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**III) அகராதியில் காண்க.**

**மிரியல், வருத்தனை, அதசி, துரிஞ்சில்**

**விடை :**

மிரியல் – மிளகு
வருத்தனை – பெருக்குதல், தொழில், சீவனம்
அதசி – சணல்
துரிஞ்சில் – வௌவால், சீக்கிரி மரம்

**IV) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

**விடை :**



ஏர் ஓட்டுன வயலினிலே
தார் ஓட்டும் காலமடா........
நஞ்சைக் காட்டின் நெஞ்சினிலே
நஞ்சு விதைக்கும் உலகமடா....
உனக்கும் எனக்கும் ஓய்வுண்டு
எல்லாப் பணிக்கும் ஓய்வுண்டு
கிழவன் ஆன போதிலும்
உழவன் பணிக்கு
ஓய்வில்லையோ............

**V) கலைச்சொல் அறிவோம் :**

Consulate – துணைத்தூதரகம்
Patent – காப்புரிமை
Document – ஆவணம்
Guild – வணிகக் குழு
Irrigation – பாசனம்
Territory – நிலப்பகுதி

**VI) நிற்க அதற்குத் தக......**

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே ? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்..... **(செப் – 20)**

| | | |
|---|---|---|
| 1. | கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன் | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன் |
| 2. | கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன் | நமது முன்னோர்களின் பண்பாட்டைக் குறித்து அறிய உதவும் கல்வெட்டு எழுத்துகளை எவரும் சிதைக்காமல் பாதுகாப்பேன். |
| 3. | பழந்தமிழர் வரலாற்று ஆவணங்களை பாதுகாக்க உதவுவதோடு, மற்றவர்கள் அவற்றை அறியவும் உதவி செய்வேன். | வரலாற்று ஆவணங்களைப் படியெடுத்து, அழியாமல் பாதுகாக்க உதவுவேன். |

**VII) அறிவை விரிவு செய்**

என் கதை – நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்
வேருக்கு நீர் – ராஜம் கிருஷ்ணன்
நாற்காலிக்காரர் – ந. முத்துசாமி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# இயல் ஒன்பது — இயல் 9. அன்பின் மொழி

## உரைநடை உலகம்

## இயல் 9. அ — ஜெயகாந்தம் – நினைவு இதழ் – உரைநடை

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. சுதந்திர இந்தியாவின்மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது (பெ.ஆ.க – 5) (மே –22)**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

**விடை : ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்**

**2. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது : (பெ.ஆ.க – 2) (செப் – 20)**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப்பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**விடை: ஆ) சமூகப்பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. எந்தத் திரைப்படத்திற்கு ஜெயகாந்தன் குடியரசுத்தலைவர் விருது பெற்றார் ?**

அ) சிலநேரங்களில் சில மனிதர்கள் ஆ) ஊருக்கு நூறுபேர்
இ) யாருக்காக அழுதான் ஈ) உன்னைப்போல் ஒருவன்

**விடை: ஈ) உன்னைப்போல் ஒருவன்**

**4. சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஜெயகாந்தனின் நூல்............ .**

அ) சில நேரங்களில் சில மனிதர்கள் ஆ) புதிய வார்ப்புகள்
இ) உன்னைப்போல் ஒருவன் ஈ) இமயத்துக்கு அப்பால்

**விடை: அ) சில நேரங்களில் சில மனிதர்கள்**

**5. சோவியத் நாட்டு விருது பெற்ற ஜெயகாந்தனின் நூல் எது ?**

அ) புதிய வார்ப்புகள் ஆ) ஒருபிடிச் சோறு
இ) இமயத்துக்கு அப்பால் ஈ) ரிஷிமூலம்

**விடை: இ) இமயத்துக்கு அப்பால்**

**6. "துவேஷத்தைப் பரப்புவது ஜெயகாந்தனின் இயல்புக்குச் சற்றும் ஒவ்வாதது" எனக் கூறியவர் ............... .**

அ) கண்ணதாசன் ஆ) அசோகமித்திரன்
இ) தாராபாரதி ஈ) சந்தானபாரதி

**விடை: ஆ) அசோகமித்திரன்**

**7. ஜெயகாந்தனின் மொழிபெயர்ப்புகளில் ஒன்று ............... .**

அ) வாழ்விக்க வந்த காந்தி ஆ) பிரளயம்
இ) கைவிலங்கு ஈ) ஒருபிடி சோறு

**விடை: அ) வாழ்விக்க வந்த காந்தி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. ஜெயகாந்தன் எழுதித் திரைப்படமான குறும்புதினம் எது ?**
அ) புதிய வார்ப்புகள் ஆ) யாருக்காக அழுதான்
இ) உண்மை சுடும் ஈ) கங்கை எங்கே போகிறாள்
**விடை: ஆ) யாருக்காக அழுதான்**

**9. ஜெயகாந்தன் யாரைப்பற்றிக் கவிதை எழுதியுள்ளார் ?**
அ) புதுமைப்பித்தன் ஆ) தாராபாரதி
இ) அசோகமித்திரன் ஈ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
**விடை: ஈ) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

**10. சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுபவர் ................ .**
அ) புதுமைப்பித்தன் ஆ) அசோகமித்திரன்
இ) ஜெயகாந்தன் ஈ) கல்கி **விடை: இ) ஜெயகாந்தன்**

**11. "தர்க்கத்திற்கு அப்பால்" சிறுகதை அமைந்த தொகுப்பு எது ?**
அ) குருபீடம் ஆ) ரிஷிமூலம்
இ) யுகசந்தி ஈ) பிரம்ம உபதேசம் **விடை: இ) யுகசந்தி**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

**விடை :**

1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு.
2. நான் எழுதுவதற்கு அதற்குரிய காரணமும் உண்டு.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. எதற்காக எழுதுகிறேன் ? என்று ஜெயகாந்தன் கூறிய காரணம் ஒன்றினைக் குறிப்பிடுக. (பெ.ஆ.க – 3)**

**விடை :**

★ நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரிவதற்காக எழுதுகிறேன் என்று ஜெயகாந்தன் கூறுகிறார்.

★ கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. ஜெயகாந்தன் தன் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாக விளக்குக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ ஜெயகாந்தன் சிறுகதையில் வரும் கதை மாந்தர் பையில் இருக்கும் ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தில் பன்னிரண்டனாவை ஊருக்கு போகும் இரயில் கட்டணத்திற்கு ஒதுக்கிவிட்டு, இரண்டணாவைக் கொடுத்து சங்கரய்யர் கடையில் காபி குடித்தார். மீதமுள்ள இரண்டணாவை கண் பார்வையற்ற பிச்சைக்காரனுக்கு அவன் எதிரே வைத்திருந்த தட்டில் போட்டார். இரண்டணா பிச்சை பாத்திரத்தில் விழுந்ததை தடவி அறிந்த பிச்சைக்காரன் சாமி நீங்க போற வழியெல்லாம் புண்ணியமுண்டு என வாழ்த்துகிறான். டிக்கெட் எடுக்கக் கவுண்டரில் தன் ஊருக்கு டிக்கெட் கேட்க, அவர் செல்லவேண்டிய ஊருக்கு பதின்மூன்றணா என்பதை அறிந்தபோது சிந்திக்கிறார்.

★ பிச்சைக்காரனுக்குப் போட்ட இரண்டணாவில் ஓரணாவை எடுத்துவிடலாமா என எண்ணித் தயங்கி தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, ஓரணாவைப் போட்டு இரண்டணாவை எடுக்க முயன்றபோது பிச்சைக்காரன், சாமி இதுதான் தர்மமா ? யாரோ ஒரு புண்ணியவான் போட்ட இரண்டணாவை எடுத்துக்கிட்டு ஓரணாவைப் போடறியே! குருடனை ஏமாத்தாதே எனக் கூற ஓரணாவைப் போட்டுத் தர்மக் கணக்கில் மூன்றணா என எண்ணிக்கொண்டே அடுத்த ஸ்டேஷன் சென்று போகலாம் என நடக்கத் தொடங்கினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தங்களது ஆசிரியரான நா.முத்துச்சாமி அவர்கள் கலந்து கொண்டு தலைமையேற்க உள்ளார்கள். எங்கள் அழைப்பைத் தட்டமாட்டீர்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இம்மடல் கண்டதும் இசைவு தெரிவித்து எங்களை மகிழ்வித்துத் தங்கள் வரவை உறுதிப்படுத்துமாறு மிகக் கனிவோடும் பணிவோடும் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
மதுரை க. மணிமாறன்.
தேதி ................

**6. பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக. (மே – 22)**

**விடை :**

தேதி............
மதுரை

அன்புநிறைந்த தாத்தாவிற்கு,

இங்கு நான், பெற்றோர், தங்கை அனைவரும் நலமாக உள்ளோம். அங்கு நீங்களும் பாசமிகு பாட்டியும் நலமுடன் வாழ இறைவனிடம் வேண்டுகிறேன். இன்றைய கொரோனா பெருந்தொற்று காலச்சூழலில் தொற்று பரவலை தடுப்பதில் ஆற்றவேண்டிய பங்கு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. அவற்றுள் சிலவற்றை தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

★ சமூக இடைவெளியை பின்பற்றுதல்.
★ சரியான முறையில் முகக்கவசம் அணிதல்.
★ வெளியே சென்றுவந்த பின்பு கைகளை சோப்பு போட்டு நன்றாகக் கழுவுதல்.
★ சளி – காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்லுதல்.

மேற்கூறிய வழிமுறைகளை தாங்களும் பாட்டியும் கடைப்பிடிப்பதோடு மட்டும் இல்லாமல் அருகில் இருப்போரையும் கடைப்பிடித்து பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பாக நீடூழி வாழ அன்புடன் வேண்டி விடைபெறுகிறேன்.

இப்படிக்கு
உங்கள் அன்பு பேரன்
ந. பார்த்தசாரதி

உறைமேல் முகவரி
பெறுநர்,
ம. புகழேந்தி
4/150, முல்லைத் தெரு,
திருச்சி – 2.

## கூடுதல் விண்ணப்பம்

**(ஐந்து மதிப்பெண்கள்)**

**1. கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

**<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்</u>**

| | | |
|---|---|---|
| 1. மாணவரின் பெயர் | : | **க. எழிலரசன்** |
| 2. பாலினம் | : | **ஆண்** |
| 3. பிறந்த நாள் | : | .................. |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. இரத்தவகை | : | **O+** |
| 6. உயரம் மற்றும் எடை | : | **120 செ.மீ / 40 கி.கி** |
| 7. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **நா. கண்ணன்** |
| 8. வீட்டு முகவரி | : | **106,திரௌபதி அம்மன் கோவில் தெரு, வேளச்சேரி, சென்னை – 42.** |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. தொலைபேசி/அலைபேசி எண் : **94430 xxxxx**
10. இறுதியாகப்படித்து முடித்த வகுப்பு : **10 ஆம் வகுப்பு**
11. பள்ளியின் முகவரி : **அரசு மேல்நிலைப்பள்ளி, வேளச்சேரி, சென்னை – 42.**
12. சேரவிரும்பும் விளையாட்டு : **கபடி**

சேர்க்கை எண் : **1632**

மாணவரின் கையெழுத்து **க. எழிலரசன்**

இடம் : சென்னை

நாள் : ................

பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து : **நா. கண்ணன்**

**2. வீட்டு எண் : 21, வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர் மாவடடத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச் செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக்கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக. (மே – 22)**

**விடை :**

1. மாணவரின் பெயர் : **வெ. குணசேகரன்**
2. பாலினம் : **ஆண்**
3. தேசிய இனம் : **இந்தியன்**
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் : **வெற்றிச் செல்வன்**
5. வீட்டு முகவரி : **21,வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர்.**
6. இறுதியாகப்படித்து முடித்த வகுப்பு : **10 ஆம் வகுப்பு**
7. பயின்ற மொழி : **தமிழ்**
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : **அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கரூர்.**
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள்

| தேர்வின் பெயர் | பதிவு எண்– ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் /100 |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு | 149050/ 2022 | தமிழ் | 92 |
| | | ஆங்கிலம் | 84 |
| | | கணக்கு | 88 |
| | | அறிவியல் | 90 |
| | | சமூக அறிவியல் | 87 |
| | | மொத்தம் | 442 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா ? : **ஆம்**
11. தாய்மொழி : **தமிழ்**
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : **அறிவியல் / தமிழ்**

**வெ.குணசேகரன்**
மாணவ / மாணவியின் கையெழுத்து

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் தன்விவரப்பட்டியல்

**(ஐந்து மதிப்பெண்கள்)**

**1. தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப்பட்டியல் ஒன்றை நிரப்புக. (அ.மா.வி)**

**விடை :** **தன்விவரப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **த. பொற்செல்வி** |
| 2. பாலினம் | : | **பெண்** |
| 3. பிறந்த தேதி மற்றும் வயது | : | ................. |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | **தமிழரசன்** |
| 6. வீட்டு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | **5, மகால் 4 வது தெரு, மதுரை. 625009** |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | .................... |
| 8. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் | : | **450 / 500** |
| 9. தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. பயின்ற மொழிகள் | : | **தமிழ் / ஆங்கிலம்** |
| 11. தட்டச்சு | : | **தமிழ், ஆங்கிலம்** |
| 12. கணினி தகுதி | : | **டி.சி.எ** |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவனத்தில் **தட்டச்சர்** பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
**த.பொற்செல்வி**

**2. எழுத்தர் பணியினை வேண்டி, வேலைவாய்ப்பிற்காகக் கொடுக்கப்பட்டத் தன்விவரப்பட்டியலைப் பூர்த்தி செய்க. (பெ.ஆ.க – 5)**

**விடை :** **பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **ர. விஜயலெட்சுமி** |
| 2. பாலினம் | : | **பெண்** |
| 3. பிறந்த தேதி மற்றும் வயது | : | ---------- |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | **க.ரவிக்குமார்** |
| 6. வீட்டு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | **21, நெல்லையப்பர் வீதி, மதுரை. 625006** |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | **98421xxxxx** |
| 8. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் | : | **482 / 500** |
| 9. தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. பயின்ற மொழிகள் | : | **தமிழ் மற்றும் ஆங்கிலம்** |
| 11. தட்டச்சு | : | **தமிழ் மற்றும் ஆங்கிலம் மேல்நிலை** |
| 12. கணினி தகுதி | : | **டேலி** |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவனத்தில் **எழுத்தர்** பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
**ர. விஜயலெட்சுமி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. எண் – 6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னைப் பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புக. (செப்–20)**

**விடை :** **தன் விவரப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூங்கொடி |
| பிறந்த நாள்/வயது | : | ................ |
| பாலினம் | : | பெண் |
| தந்தையின் பெயர் | : | தமிழரசு |
| முகவரி | : | எண்6, மதுரை மெயின்ரோடு, வத்தலக்குண்டு. |
| 10 ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | 480 |
| பட்டப்படிப்பு | : | பி.சி.ஏ. |
| தாய்மொழி | : | தமிழ் |
| பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |
| கணினி | : | வேர்டு, பவர் பாயிண்ட், வேர்டு எக்ஸெல், டாலி |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் கணினிப் பயிற்றுநர் பணி தந்தால் என் பணியைச் சிறப்பாகச் செய்வேன் என உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
பூங்கொடி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - **625001**

94430 43338

94430 46662

www.Padasalai.Net